1993 ஏப்ரல் 16]

380—

'சேகோ' நிறுவனம் மூலம் மரவள்ளிகிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு சீரான விலையை அளித்தல்.

*10219-திரு. வெ. தமிழரசு.—

மாண்புமிகு ஊரகத் தொழில் துறைஅமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குச்சிவள்ளிக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி 'சேகோ' நிறுவனத்தை (Sago Corporation) ஏற்படுத்தி சுமார் 10 மாவட்டங்களில் பயிரிடும் மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளுக்கு சீரான நல்ல விலை கிடைக்க அரசு உதவுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத்தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 'சேகோ நிறுவனம் (Sago Corporation) அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மைப் பார்த்து குறைகூறுவோர் அன்றைக்கு ஆண்ட ஆமைவேக ஆட்சிப்போல அல்லாமல், தமிழக முன்னேற்றத்தில் முயல்குட்டி வேகத்தில் இன்றைக்கு பொற்கால ஆட்சி நடத்திடும் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு, அன்றைக்கும், இன்றைக்கும், என்றைக்கும் **நன்றியுள்ள எனது பணிவான வேண்டுகோளை ஏற்று, மரவள்ளிக் கிழங்கிலிருந்து உற்பத்தியாகும் கிழங்கு மாவை, அந்த 'சாகோசெர்வ்' நிறுவனத்திற்கு, வரிச் சுமையைக் குறைக்கிற அளவிலே, ஆண்டுக்கு 50 லட்சம் ரூபாய் வீதம் இரண்டாண்டுகளுக்கு, ஒரு கோடி ரூபாய் மானியம் வழங்கியதால், மூட்டை 20 ரூபாய்க்கு விற்ற மரவள்ளிக் கிழங்கு, வரலாறு காணாத வகையில், இன்றைக்கு மூட்டை 100 முதல் 120 ரூபாய்க்கு விற்பதால், இலட்சக்கணக்கான விவசாயிகள் மனமார, உளமார, நெஞ்சார, இதயமார நன்றிப் பெருக்கோடு நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுகிறார்கள். ஆகவே, மற்ற மாவட்டங்களான பெரியார், கோவை, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் பயிரிடும் அந்த மரவள்ளிக் கிழங்கிற்காகா விவசாயிகள் நலன்கருதி, 'சப்-சொசைட்டி' அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு, தர்மபுரி, திருச்சி, பெரியார், தஞ்சாவூர், நெல்லை—கட்டபொம்மன், மதுரை, திண்டுக்கல்-அண்ணா ஆகிய இடங்களில் சேலம் 'சாகோ-செர்வ் சேவை நிறுவனத்தோடு இணைந்தே, 'சப்' கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி, அவை Salem Sago Serve வோடு ஒருங்கிணைந்து செயல்படத் திட்டம் தயாரித்து, செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை அடக்கம் காரணமாக உறுப்பினர் ** அது அவைக்குறிப்பிலிருப்பது நல்லதல்ல, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

361—

வாசுதேவநல்லூர் தொகுதி சிவகிரியில் துணைக் கருவூலம் அமைத்தல்.

*10244.—திரு. ஆர். ஈஸ்வரன் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரியில் ஒரு துணைக் கருவூலம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகிரி வட்டத்தின் தலைமையிடமான சிவகிரியில் தற்போது ஒரு துணைக் கருவூலம் இயங்கி வருகிறது. வாசுதேவ நல்லூர் பேரூராட்சியில் துணைக் கருவூலம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.